குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.

எஸ்.டி. சி. 51/2021

2022-ம் ஆண்டு மார்ச் 22 செவ்வாய் கிழமை புகார்தாரர் தரப்பு சாட்சியாகி 1-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.வெள்ளைசாமி | வயது | : |
| த/பெ | : அழகியண்ணகவுண்டர் | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : சேலம் | | |

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

எனக்கு வங்கியில் நடப்பு கணக்கு உள்ளது. இவ்வழக்கின் பணம் பாிவர்த்தனைக்கு முன்னர் எனக்கும், எதிரிக்கும் இடையே வங்கி மூலமாக ஏதேனும் பண பரிவர்த்தனை இருந்ததா என்றால் இல்லை. பணம் திருப்பி கொடுப்பது பற்றி எதிரியும் நானும், கலந்து ஆலோசனை செய்து கொண்டோம். வட்டி தொகையும் உரிய காலத்தில் திருப்பி கொடுப்பதாக எதிரியும், நானும் பேசிக்கொண்டோம். பணம் கொடுத்ததாக கூறப்படுவதும், எதிரி காசோலை கொடுத்ததாக கூறப்படுவதும் எங்கு நிகழ்ந்தது என்றால் சேலத்தில் நடந்தது. எதிரியும், நானும் தற்பொழுதும் சகஜமாக பேசிக் கொண்டு தான் உள்ளோம். எனக்கு கடன் ஏதும் இல்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக கூறப்படும் சமயத்திலும், எனக்கு எந்த கடனும் இல்லை. எனது வருமான வரி கணக்கில் எனக்கு கடன் இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே 3 காசோலை வழக்குகள் நடத்துவதாக கூறியிருக்கும் பட்சத்தில் அது குறித்து எழுத்து பூர்வமாக ஏதேனும் கணக்குகள் எழுதி வைத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியை காசோலை திருப்பப்பட்ட பிறகு நேரில் பார்த்து பணம் எதுவும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். ரவிச்சந்திரன் என்பவர் மூலம் எதிரியை எனக்கு சுமார் 7,8 வருடங்களாக தெரியும். வழக்கு காசோலையில் யார் பூர்த்தி செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரி தான் காசோலை கொடுத்தார். வழக்கு காசோலையில் எதிரியின் கையொப்பமும், பிற சங்கதிகளும் வேறு வேறு மைகளினால் நிரப்பப்பட்டுள்ளன என்றால் அதை நான் கவனிக்கவில்லை. எதிரி காசோலையில் கையொப்பம் இட்டு கொடுத்தார். வழக்கு காசோலை Impasto Technologies என்ற கம்பெனியை சேர்ந்தது என்றாலும் எதிரியின் தனிப்பட்ட பெயரில் இல்லை என்றாலும் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது் அவ்வாறு எழுதியிருப்பது எனக்கு தெரியவில்லை வழக்கு காசோலை எதிரி எனக்கு கொடுத்ததாகும். எதிரி மேற்படி நிறுவனத்தை நடத்துவதாக என்னிடம் கூறியிருக்கிறார். என்னுடைய முதல் விசாரணையில் எதிரி காய்கறி வியபாரம் செய்கிறார் என்று குறிப்பிட்டு ககூறியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் ரூ.20 லட்சம் கடன் வாங்கும் அளவிற்கு எந்த தேவையும் இல்லை என்றாலும், எதிரிக்கு ரூ.20 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு பொருளாதார வசதி இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும்பணப்பரிவர்த்தனை எதுவும் நடைபெறாததால் தான் நான் அதை எனது வங்கி கணக்கிலோ அல்லது வருமான வரி கணக்கிலோ காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. பொய்யான ஆவணத்தின் அடிப்படையில்

எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு சட்டரீதியான கடன் எதுவும் இல்லை என்றாலும், எனக்கு அவர் செலுத்த வேண்டிய நிலுவை தொகை எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியை முன்பின் தெரியாததால் தான் எனக்கு அவரது வீட்டு கதவு எண் தெரியவில்லை என்றால் சரியல்ல. ஒருவரது வீட்டு கதவு எண்ணை பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. எதிரிக்கு எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்ததாக கூறப்படும் சங்கதியை எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் என்னால் பொய்யாக புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மருமகன் ரவிசந்திரன் எம்.ஆர். மேன்சன் மற்றும்  பைனான்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். என்றால் அவர் மேன்சன் நடத்தி வருகிறார். பைனான்ஸ் செய்கிறார்.எதிரி எனக்கு அனுப்பி பதில் அறிவிப்பில் என் மருமகனிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கியதாக கூறியிருக்கிறார் என்றால் என் மருமகன் யாருக்கெல்லாம் கடன் கொடுக்கிறார் என்று எனக்கு தெரியாது. தனது பதிலறிவிப்பில் எதிரி என் மருமகனிடம் புரோனோட் , 100 ரூபாய் பத்திரங்கள் எண்ணிக்கை -7  மற்றும் எதிரியின் அம்மாவிடம் இருந்து 100 ரூபாய் பத்திரங்கள் எண்ணிக்கை -7 மற்றும் எதிரியின் ஐ.ஐ.சி.ஐ வங்கி 190088 முதல் 190132 மொத்தம் 44 காசோலைகள் என் மருமகனிடம் கொடுத்திருந்தார் என்று தனது  பதிலறிவிப்பில் எதிரி கூறியிருந்தார் என்றால் அதை நான் கவனிக்கவில்லை.  எதிரி காய்கறி தொழில் எத்தனை வருடங்களாக செய்கிறார் என்று எனக்கு தெரியாது. எதிரி கடன் கேட்டதாக கூறப்படும் தொகை ரூ.20 லட்சத்திற்கு வருடத்திற்கு 24 சதவீத வட்டி என்றால் மாதத்திற்கு ரூ.40 ஆயிரம் வருகிறது என்றால் சரிதான். 4.8.2019-ம் தேதியன்று எதிரி என்னிடம் கடன் வாங்கியதாக நான் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். 20.12.2020-ம் தேதியன்று எதிரி எனக்கு காசோலை வழங்கியதாக நான் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கணக்கின் படி மொத்தம்  16 மாதங்கள் ஆகின்றது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் 6 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வட்டி வருகிறது என்றால் சரிதான். ஆனால் எதிரி வட்டியை குறைத்து கொள்ளுமாறு கேட்டதால் ரூ.5 லட்சம் வட்டிக்கு சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ரூ.1 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வட்டியில் நான் குறைத்த விவரத்தை என் வழக்கறிஞர் அறிவிப்பு , புகார் மற்றும் பிரமாண பத்திரிக்கையில் நான் கூறவில்லை என்றால் அது வட்டி குறைத்து கேட்கும் வழக்கம் பொதுவாக இருப்பதால் தேவையில்லை என்று நான் விட்டு விட்டேன். இது ஜோடனை செய்த வழக்கு என்பதால் தான் நான் அவ்வாறு குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் கூறியுள்ள சங்கதியான எதிரி காசோலை கொடுத்து புரோனோட்டை திரும்ப பெற்று கொண்டார் என்ற விவரம் பொய்யானது என்றால் சரியல்ல. எதிரி செக்யூரிட்டிக்காக ரவிச்சந்திரன் என்பவரிடம் கொடுத்திருந்த காசோலையை இவ்வழக்கில் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.